# பத்திரிக்கை செய்தி

## பட்டா ஆணையினை வழங்க ரூ.1,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய கிராம நிர்வாக அலுவலர் கைது

புகார்தாரர் திரு.வீரமணி, காலணி தெரு, உரங்குடி, வல்லம், எட்டுக்குடி அஞ்சல், திருக்குவளை தாலுக்கா, நாகப்பட்டிணம் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் தன்னுடைய மனைவி பெயரில் உள்ள பட்டாவினை திருத்தம் செய்த தன்னுடைய பெயருக்கு திருத்தம் செய்து திருக்குவளை தாலுக்கா மண்டல துணை வட்டாட்சியர் வழங்கிய பட்டா ஆணையினை தன்னிடம் வழங்குவதற்கு திரு.ராஜாராமன், கிராம நிர்வாக அலுவலர், வல்லம், திருக்குவளை தாலுக்கா, நாகப்பட்டிணம் மாவட்டம் என்பவர் தனக்கு ரூ.1,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், நாகப்பட்டிணம் மாவட்ட லஞ்ச ஒழிப்பு பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 02.08.2024, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.ராஜாராமன், கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் லஞ்ச பணம் ரூ.1,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.